ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2218/51 - 2021 මාර්තු මස 09 වැනි අඟහරුවාදා - 2021.03.09

*2218/51 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்*

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம், திருத்தப்பட்டவாறான 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதிய 2152/32 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளையில், 2 ஆம் பந்தியின் (எ) ஆம் துணைப்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் துணைப் பந்தியை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைக்கின்றேன் :-*

*(எ) 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, வர்த்தக மைய ஒழுங்குவிதிகள் மற்றும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு கருத்திட்டத்தையும் தவிர்த்து, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டு சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ், இலங்கை முதலீட்டு சபையுடன் ஒப்பந்தம் செய்துள்ள, கட்டம் ஒன்றிற்கு அமெரிக்க டொலர் 50 மில்லியனுக்குக் குறையாத மூலதன முதலீட்டைக் கொண்ட எந்தவொரு நிறுவனத்தாலும் அந்நிறுவனத்தின் எந்தவொரு கருத்திட்டத்தினதும் பயன்பாட்டிற்காக திட்ட அமுலாக்கம் அல்லது கட்டுமான காலப்பகுதியில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு முன்னதாக கருத்திட்டம் தொடர்பான மூலதனப் பொருட்களை இறக்குமதி செய்தல்.*

*இக்கட்டளை, 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறுதல் வேண்டும்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2021, மாச்சு 09.*

*03-740*

1A-PG 5346 — 475 (2021/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*